O.S. 102/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:09.08.2024

DW1:செந்தில்குமார் த/பெ– நாராயணசுவாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 மாதத்திற்கு வாடகை பாக்கி இருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் வாடகை பாக்கி இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் 07.03.2022 ல் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.1 நிரூபண வாக்குமூலத்தில் ஒரு கணக்கீட்டு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் 01.01.2014 முதல் எந்தெந்த தேதிகளில் எவ்வளவு ரூபாய் வாடகை செலுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எந்தெந்த தேதிகளில் நாங்கள் எவ்வளவு ரூபாய் வாடகை செலுத்தியுள்ளோம் என்ற விபரம் எங்கள் அலுவலக கோப்புகளில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.102/2019 தாக்கல் செய்யப்பட்ட பின் 12.09.2022 ல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வரைவோலை மூலமாக ரூ.3,71,786/- இந்நீதிமன்றத்தில் செலுத்தினோம் என்றால் சரிதான், காசோலை மூலம் நாங்கள் ஒவ்வொரு மாதமும் அனுப்பியதை வாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதால் வரைவோலை மூலம் செலுத்தினோம் என்று சாட்சி பின்னிட்டு கூறுகிறார். அப்போது தாக்கல் செய்த மெமோவில் ரூ.5,34,959/- வாடகை பாக்கி இருப்பதாக வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

12.09.2022 லிலோ அதற்கு பின்னரோ, அன்றைய தினத்தில் மெமோவில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு மாறானது என்று நாங்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது ரூ.1,43,000/- த்திற்கு வரைவோலை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மெமோவில் எந்த மாதத்திலிருந்து, எந்த மாதம் வரை செலுத்தவேண்டிய வாடகை பாக்கி என்று சொல்லவில்லை என்று சொன்னால் எந்த மாதத்திலிருந்து என்று சொல்லவில்லை, ஆனால் எந்த மாதம் வரை என்று சொல்லியுள்ளோம். அதில் ஏப்ரல்-2024 வரையிலான வாடகை என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கிடை சொத்தை வாதிகள் கிரையம் வாங்கிய தேதியிலிருந்து வாடகை தொகையினை செலுத்தவேண்டியது பிரதிவாதிகளின் கடமை என்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.102/2019 வழக்கின் எதிர்வழக்குரையின் பத்தி -5 ல் விருதுநகர், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதத்தின் மூலமாக வாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளது தெரியவந்தது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதம் 31.12.2013 ல் விருதுநகர், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியாது, ஆனால் கடிதம் பெறப்பட்டுள்ளது. வாதிகளும் அவர்கள் கிரையம் பெற்றதாக எங்கள் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பியதாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதமும் 31.12.2013 வாதியிடம் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியாது, ஆனால் கடிதம் பெறப்பட்டுள்ளது. எங்கள் அலுவலக பதிவேடுகளை பார்வையிட்டால்

மேற்சொன்ன இரண்டு கடிதங்களும் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட விபரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மலா, ராஜீ, திருமகள் ஆகியோர்கள் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில், வழக்கிடை சொத்தில் கடனை பெற்று அந்த கடனை அவர்கள் கட்டாத நிலையில் ஷர்பாசி ஆக்ட் கீழ் நடவடிக்கை எடுத்து அந்த சொத்தை வாதிகள் ஏலம் எடுத்து அவர்கள் பெயரில் கடந்த 13.12.2013 ல் ஏல விற்பனை சான்றிதழ் அளிக்கப்பட்டு அந்த விபரத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் வாதிகள் எங்கள் அலுவலகத்திற்கு மேற்படி கடிதங்கள் மூலம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். அந்த தகவல் கடிதம் கிடைத்த தேதியிலிருந்து பிரதிவாதிகள் வாதிகளின் வாடகைதாரராக இருக்கிறோம் என்றால் சரிதான். முதன்முதலாக எந்த தேதியிலிருந்து வாதிகளுக்கு வாடகை எங்கள் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். முதன்முதலில் எப்போது வாடகை செலுத்தினோம் என்று கேட்டால் நாட்களாகி விட்டதால் அலுவலக பதிவேடை பார்த்து தான் சொல்ல முடியும். எங்கள் அலுவலகத்தில் இருந்து நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு ஏதேனும் அதிகார ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்திலும் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் எனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இரண்டு வழக்குகளின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரைகளை நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல்செய்வதற்கு முன்பு படித்து பார்த்தேன். வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் அவர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். எங்கள் அலுவலகத்தில் உள்ள

ஆவணங்களை பார்த்துவிட்டு தான் எனது நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். எனது நிரூபண வாக்குமூலத்தில் முதன்முதலில் எப்போது வாடகை செலுத்தப்பட்டது என்றும், எந்தெந்த தேதியில் எவ்வளவு வாடகை செலுத்தப்பட்டது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் பட்டியலிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 13.12.2013 ம் தேதியிலிருந்து மேற்படி திருமதி.நிர்மலா, திருமதி.ராஜீ, திருமதி.திருமகள் ஆகியோர்களுக்கும் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கும், சுவான்தார் வாடகைதாரர் என்ற உறவு அற்றுப்போய்விட்டது என்று சொன்னால் சரிதான், ஆனால் எங்களுக்கு அப்போது தெரியாது. வங்கியிலிருந்தும், வாதிகளிடமும் இருந்து எங்களுக்கு கடிதம் வந்த பின்னர் தான் அந்த விபரம் தெரியும். திருமதி.நிர்மலா, திருமதி.ராஜீ, திருமதி.திருமகள் ஆகியோர்களுக்குடன் எந்த தேதியிலிருந்து டீலர்ஷிப் ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் ஆவணங்களை பாரத்தால் தான் தெரியும். அந்த மூன்று நபர்களுக்கும் வாடகை காசோலை அல்லது வரைவோலை அல்லது ஆன்லைன் மூலமாக தனித்தனியாக செலுத்தப்பட்டது. அது எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை செலுத்தப்பட்டது என்று கேட்டால் 10 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும், அந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். மேற்படி 3 நபர்களுடன் எந்த தேதி வரை டீலர்ஷிப் இருந்தது என்று சொன்னால் தற்போதும் உள்ளது. தற்போதும் மேற்படி 3 நபர்களுடன் எங்களுக்கு டீலர்சிப் உள்ளதா என்றால் உள்ளது. தற்போது வரை அவர்கள் டீலராக இருக்கிறார்கள் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும். நான் தாக்கல் செய்துள்ள

வழக்கிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும், எனது எதிர் வழக்குரையிலும் மேற்படி 3 நபர்களுடன் டீலர்சிப் இருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, இந்த வழக்கானது டீலர்சிப் பற்றிய வழக்கு என்பதில்லை, இடம் சம்மந்தமான வழக்கு என்பதால் அது தேவையில்லை என்று சாட்சி தாமாக கூறுகிறார். அ.வ.எண்.140/2014 என்ற வழக்கை மேற்படி 3 நபர்களும் வாதிகளின் மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.140/2014 வழக்கு பற்றி எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். டீலர் என்றால் முகவர். அ.வ.எண். 140/2014 வழக்கு பற்றிய விபரம் அலுவலக கோப்பு மூலமாக தெரிந்தது. அந்த வழக்குரை நகலை அலுவலக கோப்பில் பார்த்து தான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் எங்கள் நிறுவனம் விற்பனை முகவரை வெளியேற்றுவதற்கு முன்பாக எங்கள் முன்னாள் முகவரும் வாதிகள் மீது அ.வ.எண். 140/2014 தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த முன்னாள் முகவர் யார் என்று கேட்டால் திருமதி.நிர்மலா, திருமதி.ராஜீ, திருமதி.திருமகள் ஆகியோர்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக முகவராக விடுமுறை காலத்தில் இருந்தனர். அந்த சமயத்தில் அந்த டீலர்சிப்பை ரத்து செய்து அவர்களை வெளியேற்றி விட்டோம் என்று சொன்னால் ரத்து செய்யவில்லை, ஆனால் விடுமுறை காலத்தில் இருந்தனர். எனது நிரூபண வாக்குமூலத்தில் அவர்களை வெளியேற்றியதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் தான் அ.வ.எண். 140/2014 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. அதில் ஒரு உத்தரவு பெறப்பட்டுள்ளது என்று

சொன்னால் எங்கள் அலுவலக கோப்புகளை பார்த்து தான் சொல்லமுடியும். 25.03.2024 ல் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண். 140/2014 வழக்கு பற்றி அ.வ.எண்.102/2019 ன் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அ.வ.எண். 194/2022 என்ற வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அ.வ.எண்.140/2014 வழக்கு 27.02.2017 ல் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், இந்த விபரம் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கும் தெரியும் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

( இரு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).